



Scanned with CamScanner

# நீதி இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள்

முனைவர்.து.ஜெமிலா மார்ஷல்
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை,
மார்கிரிகோரியஸ் கல்லூரி,
சென்னை – 37.

பண்பாடு என்ற சொல் பண் → பண்படு → பண்பா... என உருவாக்கம் பெற்று பக்குவம் பெற்ற ஒரு நிலை... குறிக்கிறது. பக்குவம் பெற்றவரின் வாழ்வு, அதாவது பண்... கொண்டவரின் வாழ்வு சிறப்பாக அமைவதால் பண்பாடு என்... தமிழர் மொழியியல் நோக்கில் உயர்ந்த, மேம்படுத்தக் கூ... பழக்கவழக்கங்களை எடுத்துக் கூறும் சொல்லாகவே உள்ள...

ஒரு நாட்டின் பண்பாடு அந்நாட்டு நீதிநூல்கள... அடங்கியிக்கிறது. இந்திய சிந்தனையாளர்களுள் உலகு த... சிந்தித்த (Universalism) வள்ளுவர் தமிழ்பண்பாட்டின... அடுத்து வரும் சந்ததியாளருக்கு எவ்விதம் பறைசாற்றி வி... சென்றிருக்கிறார் என்பதனை ஆய்வதாக இக்கட்டு... அமைகிறது.

அறிவு நூல் என்றும், அறிவுரை நூல் என்றும் அறநூ... என்றும் உணரப்பெறும் திருக்குறளின் கருத்துக்க... அடிப்படையில் பண்பாட்டை கீழ்கண்டவாறு பகுக்கலாம். அவை...

1. தனிமனிதபண்பாடு
2. சமூகப்பண்பாடு
3. சமயப்பண்பாடு

## தனிமனிதப் பண்பாடு

தனி மனிதனது உணர்வுகள், சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், செயல்பாடுகள் போன்றவை தான் ஒரு சமூகத்தின் பண்பாட்டினை நிர்ணயிக்கிறது. பண்பட்ட மனதினை உடைய ஒவ்வொரு தனிமனிதனும் சிறந்த சமூகத்தினை உருவாக்குகிறனர். தனி மனிதன் பின்பற்ற வேண்டிய பண்பாட்டுக் கூறுகளாக ...வற்றை பட்டியலிடுகிறார்.

# திருவிவிலியமும் - திருக்குறளும்

D. ஜெமிலா மார்ஷல்,
முனைவர்ப் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
இலயோலா கல்லூரி, சென்னை-34.

த்துவர்களின் புனித நூலாகப் போற்றுப்படுவது விவிலியம். இந்தப்
ந்த நூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டு பிரிவுகளாகக்
ணப்படுகிறது. கிறித்துவின் பிறப்பு, அவரின் போதனைகள், உலக
க்களின் பாவத்திற்காக அவர் சிலுவையில் தன்னையே பலியாக்கிய
தும் போன்ற வரலாறுகளை இப்புனித நூல் விளக்குகிறது. வரலாற்றை
ரண்டாகப் பிரிக்கும் ஓர் உன்னத புனித நூல் விவிலியமாகும்.


லக மக்கள் நல்வாழ்வு வாழ வழிகாட்டிய நூல் திருக்குறள். இது
மிழில் அமைந்திருப்பது தமிழர்களுக்கு சிறப்பு. உலகப் பொது
றையாம் இந்நூல் அறநெறிகளைச் சமுதாயம் சார்ந்த நோக்கோடு
றியுள்ளது. தனிமனித ஒழுக்கம், சமுதாய ஏற்றத்தாழ்வு ஆகியவை
அதிகரித்த காலத்தில் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக எழுதப்பட்ட
அற இலக்கியமாகிய திருக்குறளின் கருத்துக்களும், சமய நூலாகிய
விவிலியத்தின் போதனைகளும் அடிப்படையில் ஒரு தன்மையதா
காணப்படுகின்றன. இதனைச் செய், இதனைச் செய்யாதே என்
அறுதியிட்டு கூறி மக்களை ஒழுங்குபடுத்தும் சன்மார்க்க நீதி இவ்விரு
ல்களிலும் வெளிப்படும் விதத்தினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிற

## பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்:

"பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" குறள்-580



Scanned with CamScanner




Scanned with CamScanner

"தமிழ் இலக்கியங்களில் காதலும் வீரமும்"
பன்னாட்டுக் கருத்தரங்கம் 14.12.2018



# குறுந்தொகை காட்டும் காதல் வாழ்வு

துு. ஜெமிலா மார்ஷல்
முனைவர் பட்ட ஆய்வாளர்
இலயோலா கல்லூரி சென்னை - 34.

## முன்னுரை

உலகில தமிழ்ச் சமூகம் பழமை மிக்கது. சமூக மரபுகளை தோற்றுவித்து அதனை வாழ்வில் கடை பிடித்து வாழ்ந்தது. இதனைக் காலம் காட்டும் கண்ணாடியாம் அக்கால இலக்கியங்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் அகநூலான குறுந்தொகையில் காதல் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ள பாங்கினை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.


## அகத்திணைப் பாகுபாடு

ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உளதாய காதல் ஒழுக்கம் அகத்தினை ஆகும். தலைவனும் தலைவியும் ஒத்த அன்பால் கூடி மகிழும் உணர்வு நிலையை பற்றிக் கூறுவதால் இது அகம் எனப்பட்டது. திணை என்பது ஒழுக்கம். காதல் ஒழுக்கத்தைப் பண்டைத் தமிழர் ஒருபாற் காதல், ஒத்த காதல், ஒவ்வா காதல் என மூன்றாக பகுத்திருந்தனர். ஒத்த காதல் அன்பின் ஐந்திணை எனப்பட்டது.

## களவு - கற்பு

அகவாழ்வினை களவு - கற்பு என இருவகையாகப் பிரித்திருந்தனர் பண்டையத் தமிழர்கள். களவாவது பிறர் நன்கு அறியாதபடி மறைவாக நிகழும் ஒழுக்கம். தலைவனும் தலைவியும் ஓரிடத்தில் எதிர்பட்டு நெஞ்சு கலந்து அன்பு நெறிப்படுதல் களவு எனப்பட்டது. திருமணத்திற்கு முந்தைய காதல் களவு ஆகும்.

களவொழுக்கம் ஒழுகக் களவு வெளிப்பட்ட பின் பலரறிய திருமணப் செய்து கொண்டு இல்லற வாழ்வில் ஈடுபடுவது கற்பு எனப்பட்டது களவின் கண் கூடிய ஒத்த தலைவனும், தலைவியும் மணம் புரியாது இல்லறம் நடத்துவது ஆகாது எனவே "கற்பு வழுவாமல் கணவன் செயல்களில் உதவியாய் இருந்து அவனால் விரும்பப்படும் செயல்களுக்கு ... என




Scanned with CamScanner

# 148. பட்டினப்பாலை புலப்படுத்தும் வணிகமரபு

து. ஜெமிலா மார்ஷல்
முனைவர் பட்ட ஆய்வாளர்
இலயோலா கல்லூரி
சென்னை.

## முன்னுரை

சோழன் கரிகால் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது பட்டினப் பாலை. ஈற்றடி நாற்சீராகவும் ஈற்றயலடி முச்சீராகவும் அமைந்த ஆசிரிய முடிவு கொண்டுள்ள இப்பாடல் வஞ்சி நெடும்பாட்டு என்றும் வழங்கப்பெறும். இப்பட்டினப்பாலையில் கிடைக்கப்பெறும் வணிக மரபினை இக்கட்டுரை ஆராய்கிறது.

## தமிழ் வணிகம்


சங்க காலத்துத் தமிழ் வணிகத்தைப் பற்றிக் கூறும்போது, அக்காலத்து மக்கள் வணிகத்தையே நம்பி வாழ்ந்தனர். அவர்கள் தரை வழியாகவும், கடல் வழியாகவும் வாணிகம் செய்தனர். பெரிய வாணிகம் செய்தவர்கள் பெருங்குடி வணிகர் எனப்பட்டனர். அயல்நாட்டிற்குக் கூட்டமாக வணிகம் செய்யச் சென்றவர்கள் வணிகச் சாத்து எனப்பட்டனர். வணிகச் சாத்தை வேடர்கள் கொள்ளையடித்ததை,

"மழைபெயின் மறந்த கழை திரங்கு இயவில்
செல் சாத்து எறியும் பண்பில் வாழ்க்கை...."

(அகம் 245:5-7)

என்று சங்க நூல்கள் கூறுகின்றன.

Scanned with CamScanner


தமிழ்க் காப்பியங்களில்
வாழ்வியல் நோக்கு
தொகுதி–2
தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் ப. முருகன்
இணைப் பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. இரமேஷ்
முனைவர் செ. செல்லப்பிள்ளை
முனைவர் த. கெஜலட்சுமி
முனைவர் கு. சுதாகர்
முனைவர் சி.சதானந்தன்
Scanned with CamScanner

## 11. சிலம்பில் வாழ்வில் நெறிகள்

து. ஜெமிலா மார்ஷல்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
மார்கிரிகோரியஸ் கல்லூரி, சென்னை-34.

**முன்னுரை**

உலகிலேயே சிறந்த வாழ்வியல் நெறிமுறைகளைப் ...பற்றியவர்கள் தமிழர்கள் என்பதை பறைசாற்றுகின்றன ...தமிழ் இலக்கியங்கள். சங்க இலக்கியங்கள் அனைத்தும் ...தலையும் வீரத்தையும் போற்ற, அற இலக்கியங்கள் நீதி ...கருத்துக்களை உணர்த்த, ஐம்பெருங்காப்பிங்களோ குடி ...மக்களின் வாழ்வியலை எடுத்தியம்புகிறது. ஆடவரும் ...பெண்டிரும் இல்லறத்தில் ஈடுபட்டு நல்ல மக்களைப் பெற்று, வளர்த்து சுற்றந்தழுவி நல்லறங்களைச் செய்து ...தன் சுற்றமும் தான் வாழும் சமூகமும் போற்ற இனிய வாழ்வு வாழ்தலே வாழ்வியலாகும். முதல்காப்பியம், ...முத்தமிழ்க்காப்பியம், பெண்மைக்காப்பியம் இரட்டைக்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் போற்றப்படுகின்ற சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இல்லற மாண்பு**

மனித வாழ்வினை இல்லறவியல், துறவறவியல் என இருவகைப்படுத்தலாம். புலனை அடக்கி தெய்வ நிலையை பெற வழிவகுப்பது துறவறவியல். மனைவி மக்களோடு இன்புற்று வாழ்வது இல்லறவியல் இவ்விரண்டிலும் உயர்வாய் போற்றப்படுவது இல்லறவியல் ஆகும். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் இது" என்னும் குறள்வழி அன்பும் அறமும் உடைய தலைவன் தலைவியின் இல்வாழ்க்கை சிறப்பாக அமையும் என்பதை உணரலாம். மனையறம் படுத்த காதையில் கோவலன் கண்ணகி ஆகிய இருவாயின் வாழ்வு அன்பும் அறமும் உடைய இன்ப வாழ்வாக சிலகாலம் அமைகிறது. இல்லற வாழ்வில் இன்பம் மட்டுமின்றி துன்பமும் வரும். துன்பம் வரும் போது

Scanned with CamScanner